# கேள்வி அறிவித்தல் - பாதுகாப்பு சேவை - 2027

## கல்வி, பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு - வடக்கு மாகாணம்.

## NP/3/3/F7/CF/POSS/2026/10

1. தலைவர், மாகாண அமைச்சுப் பெறுகைக் குழுவினால் கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ்வரும் அலுவலகங்களுக்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கு கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு - வடமாகாணம் சார்பில் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்வி கோரலானது **தேசிய போட்டி விலைக் கேள்வி** முறைப்படி மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, தகைமையான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
    a) கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    b) அத்துடன் பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தத்தில் நுழைவதற்கான தகுதியினை பெறுவதற்கும் மற்றும் ஒப்பந்தம் உரியவாறு வலுவடையதாக்கவும் கேள்விதாரர் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.
    a) வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. ஒப்பந்தத்திற்கான மதிப்பிட்ட செலவு ரூ.5மில்லியனை விட அதிகமாக உள்ள கேள்விப்பத்திரங்களுக்கு, விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்நச் சட்டத்தின் (Public Contract Act No.03 of 1987)கீழ் இலங்கை கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருக்க வேண்டும், மேலும் அதற்கான சான்றிதழினை (PCA-03ஐ) சமர்ப்பிக்க வேண்டும்.

6. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு - வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் **09.00 மணி தொடக்கம் 15.00 மணி** வரை கல்வி அமைச்சு அலுவலக **நிதிக்கிளையில்** பரிசீலிக்க முடியும்.

8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆங்கில** மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை (மூலப்பிரதி மற்றும் நகல்) **கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம், செம்மணி வீதி , நல்லூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் வேலை நாட்களில் 12.10.2026 ஆம் திகதி தொடக்கம் 26.10.2026 ஆம் திகதி வரை காலை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக **ரூபா.12,000.00** இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

9. கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்ட தகவல்களின் படி ''செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம் எனும் பெயரில் பெறப்பட்ட கேள்விப்பிணையினை/வங்கிவரைபினை அல்லது குறித்த அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட பண வைப்பின் பற்றுச்சீட்டினை (பொது172 இன் மூலப்பிரதி) விலைமனுவுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

10. கேள்வி ஆவணங்கள் **27.10.2026** ஆம் திகதி **15.00** மணிக்கு முன்பதாக **கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் (**27.10.2026 ஆம் திகதி 15.00** மணிக்கு) கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடியவுடன் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

11. **20.10.2026 ஆம் திகதி மு.ப 10.00** மணிக்கு **கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெறுகை முற்கூட்டத் திகதி நடைபெறும்.

| **Bid ID** | **Description Service** | **Estimated in Mn (Without VAT)** | **Contract Period** | **Bid Security** | | **Bid Validity Period (Up to)** | **Non Refundable Fees** |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **Amount (Rs)** | **Validity Up to** | | |
| **NP/3/3/F7/CF/ POSS/2026/10** | **Security Service** | **45 Mn** | **01 Year** | **560,000.00** | **22nd February 2027** | **91 Days 25th January 2027** | **12,000.00** |

ம.பற்றிக் டிறஞ்சன்,
தலைவர், மாகாண அமைச்சு பெறுகைக்குழு(பெரியது)
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம்,
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 221 9259 ,021 222 2283 திகதி: 12.10.2026

தொலைநகல் இல:- 021 222 2293